## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 3/2023 |
| Deposition Of Witness for | : | PW 8 |
| Name | : | **திரு. பழனிக்குமார்** |
| Father Name | : | திரு. தண்டபாணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10th August 2026.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

VC மூலம் சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மதுரை ESI மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 12.08.2010 ஆம் தேதி சிவகங்கை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வந்த போது நாகராஜ் என்ற 35 வயது மதிக்க தக்க ஆண் பிரேதம் பிரேத விசாரணைக்காக வந்தது. மேற்படி நடவடிக்கை சம்பந்தமாக தலைமை காவலர் முரளி என்பவர் மூலமாக கோரிக்கை செய்யப்பட்டது. 12.08.2010

ஆம் தேதி காலை 11.00 மணியளவில் பிரேத பரிசோதனை செய்தேன். அவருக்கு இடது தொடையில் ஒரு மச்சமும் , இடது காலில் ஒரு தலும்பு காயமும் இருந்தது. அவரது உடல் விரைப்பு தன்மை ஏதும் இல்லை . நேராக படுத்திருந்தார் . அவருடைய கழுத்தில் கயற்றின் தழும்பு காணப்பட்டது. அவரின் கண்கள் மூடியிருந்தது. வாய் திறந்திருந்தது. நாக்கு ஏதும் பல்லால் கடிக்கப்பட்டு காயம் ஏதும் இல்லை. மூக்கில் இருந்தும் வாயில் இருந்தும் ரத்த கசிவு இருந்தது. அவருக்கு வெளிகாயங்களாக வலது கையில் வீக்க காயம் 5x5 cm இருந்தது. சின்ன சிராய்ப்பு காயம் 2 cm மார்பு பகுதியில் இருந்தது. இடதில் இருந்து வலது பக்கமாக கழுத்து பகுதியில் கயிற்றின் தழும்பு காணப்பட்டது. கயிற்றின் முடிச்சு பகுதி வலது பக்க பின் கழுத்து பகுதியில் இருந்தது. கழுத்து பகுதியில் உள்ள தமனி நாளத்தில் ரத்த கசிவும் ரத்தம் உறைந்தும் காணப்பட்டது. அவரது தசைகளிலும் ரத்த கசிவு இருந்தது. அவருடைய கழுத்து ஹெய்யாட்டு எழும்பு ஒடிந்து இருந்தது. அவருடைய வயிற்று பகுதியில் 100 மில்லி திரவம் இருந்தது சிறு குடல் காலியாக இருந்தது. அவருடைய கல்லீரலில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. அவருடைய தலைப்பகுதியில் காயம் ஏதும் இல்லை. மேற்படி இறந்தவருக்கான இறப்பு காரணமானது கழுத்து எழும்பு பகுதியில் அதிக அழுத்தம் காரணமாக மூச்சு செல்வதில் தடை ஏற்பட்டு ரத்த ஓட்டம் தடைப்பட்டதால் இறப்பு ஏற்பட்டது. பிரேத பரிசோதனைக்கு 12 – 24 மணிநேரம் முன்னதாக அவருக்கு இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என கருத்துரைத்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளேன். நான் வழங்கியுள்ள பிரேத பரிசோதனை அறிக்கை **அசாஆ 5** ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

இறந்தவர் மது அருந்தியிருந்தாரா என்றால் மேற்படி இறந்தவருடைய உடல் உறுப்புக்கள் தடயவியல் (Forensic) துறைக்கு அனுப்பபட்டுள்ளதால் மேற்படி கேள்விக்கான விடையை அவர்கள் தான் அளிக்க இயலும்.

**<u>மறுவிசாரணை: இல்லை</u>**

**Note:**
With a request to send the signed deposition (Right End of every page) by way of mail and Hard copy through courier.
Emai ID: subcourtsvg@gmail.com